## முதல் தாள் பாடத்திட்டம்
## பிரிவு "அ"

### பகுதி 1 தமிழ் மொழி வரலாறு

முதன்மையான இந்திய மொழி குடும்பங்கள் – இந்திய மொழிகளுக்கிடையே பொது நிலையிலும், சிறப்பாக திராவிட மொழிகளிலும் தமிழ் மொழி பெறும் இடம் – திராவிட மொழிகளின் வகைப்பாடும் அவை பரவியுள்ள தன்மையும்.

சங்ககாலத் தமிழ் – இடைக்காலத்தமிழ்: பல்லவர் காலத் தமிழ் மொழி அமைப்பு மட்டும் – தமிழில் பெயர், வினை , பெயரடை, வினையடை, கால இடைநிலைகள் மற்றும் வேற்றுமை உருபுகள் ஆகியவற்றின் போக்கு பற்றிய வரலாற்று நோக்கிலான ஓர் ஆய்வு.

பிறமொழிகளில் இருந்து தமிழ் கடன் பெற்ற சொற்கள், தமிழில் வழங்கும் சமூக மற்றும் வட்டார கிளை மொழிகள், பேச்சுத் தமிழுக்கும் இலக்கிய தமிழுக்குமான வேறுபாடு.

### பகுதி 2 தமிழ் இலக்கிய வரலாறு

தொல்காப்பியம் – சங்க இலக்கியம் – அகம், புறம் எனும் பாகுபாடு – சங்க இலக்கியத்தின் சமய பொதுநோக்கு அற இலக்கியங்களின் வளர்ச்சி – சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை.

### பகுதி 3

பக்தி இலக்கியம் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆழ்வார் பாடல்களில் நாயக நாயகி பாவம் – சிற்றிலக்கிய வடிவங்கள்: தூது, பரணி, குறவஞ்சி, உலா.

இக்கால தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்கான சமூக காரணிகள் : நாவல், சிறுகதை, புதுக்கவிதை – புதுமை படைப்புகளின் ஆக்கத்தில் வேறுபட்ட அரசியல் கருத்தாக்கங்களின் தாக்கம்.

## பிரிவு "ஆ"

### பகுதி 1: தமிழியலின் அண்மைக்கால போக்குகள்

திறனாய்வு அணுகுமுறைகள்: சமூகவியல், உளவியல், வரலாற்றியல் மற்றும் அறவியல் – திறனாய்வின் பயன்பாடு – பலவகை இலக்கிய

உத்திகள் : உள்ளுறை, இறைச்சி , தொன்மம் , ஒட்டுருவகம் , அங்கதம் , மெய்ப்பாடு, படிமம் , குறியீடு, இருண்மை – ஒப்பிலக்கிய கருத்தாக்கம் – ஒப்பிலக்கிய கொள்கை.

## பகுதி 2

தமிழில் நாட்டுப்புற இலக்கியங்கள்: கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் – சமூகவியல் பார்வையில் நாட்டார் வழக்காற்றியல் – மொழிபெயர்ப்பின் பயன்கள் – மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்கள் – தமிழில் இதழியல் வளர்ச்சி.

## பகுதி 3 தமிழர்களின் பண்பாட்டு வரலாறு

காதல் , போர் பற்றிய கருத்தாக்கம் – அறக் கோட்பாடுகள் –

தொல் தமிழர் போரியல் அற நெறி முறைகள் – பழக்கவழக்கங்கள் – நம்பிக்கைகள் , சடங்குகள் , ஐந்திணைகள் காட்டும் வழிபாட்டு முறைகள் – சங்கமருவிய கால இலக்கியங்களில் புலப்படும் பண்பாட்டு மாற்றங்கள்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகள் ( சமணம் மற்றும் பௌத்தம்) , காலம் தோறும் கலை மற்றும் கட்டிட நுட்பங்களில் ஏற்பட்ட வளர்ச்சி( பல்லவர், பிற்கால சோழர்கள், நாயக்கர் காலம்).

பல்வேறு அரசியல் சமூக சமய பண்பாட்டு இயக்கங்கள் தமிழ்ச் சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் – இக்கால தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு மாற்றத்தில் வெகுசன ஊடகங்கள் பெரும் பங்கு.

## இரண்டாம் தாள் பாடத்திட்டம்

## பிரிவு "அ"

### பகுதி 1 பழந்தமிழ் இலக்கியம்

1. குறுந்தொகை ( 1 – 25 பாடல்கள்)
2. புறநானூறு ( 182 – 200 பாடல்கள்)
3. திருக்குறள், பொருட்பால் : அரசியல் அமைச்சியல் ( இறைமாட்சி முதல் அவை அஞ்சாமை முடிய)

### பகுதி 2 காப்பியம்

1. சிலப்பதிகாரம் ( மதுரைக் காண்டம் மட்டும்)
2. கம்பராமாயணம் : கும்பகருணன் வதைப் படலம்

### பகுதி 3 பக்தி இலக்கியம்

1. திருவாசகம் : நீத்தல் விண்ணப்பம்
2. திருப்பாவை முழு பகுதி

## பிரிவு "ஆ"

### பகுதி 1 :

**கவிதை**

1. பாரதியார் : கண்ணன் பாட்டு
2. பாரதிதாசன் : குடும்ப விளக்கு
3. நா காமராசன் : கருப்பு மலர்கள்

**உரைநடை**

1. மு வரதராசனார்: அறமும் அரசியலும்
2. சி என் அண்ணாதுரை : ஏ! தாழ்ந்த தமிழகமே!

### பகுதி 2 நாவல், சிறுகதை, நாடகம்

1. அகிலன் சித்திரப்பாவை
2. ஜெயகாந்தன் : குருபீடம்
3. சோ: யாருக்கும் வெட்கமில்லை

### பகுதி 3 நாட்டுப்புற இலக்கியம்

1. முத்துப்பட்டன் கதை : நா.வானமாமலை
2. மலையருவி : கி வா ஜெகந்நாதன்